இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 309 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 06 – சனிக்கிழமை 20 ஜூன் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 309 : Thiruvalluvar Year - 2057 - Aani 06 - Saturday 20 June 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## முரண்பாடுகளின் மொத்த உருவமான ஆளுநர் உரை

# த.வெ.க. - பா.ஜ.க. மறைமுகக் கூட்டணியை அம்பலப்படுத்துகிறது!



சென்னை – ஆழ்வார்பேட்டையில் உள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது இல்லத்தில், நேற்று முன்தினம் விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வானூர் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் இரா.மைதிலி ராஜேந்திரன் – பெ.இராஜேந்திரன் இணையரின் மகன் இரா.சசிதரன் அவர்களுக்கும், வானூர் கிழக்கு மாவட்டப் பிரதிநிதி டி.ரத்தினவேல் – சுஜாதா ரத்தினவேல் இணையரின் மகள் ர.கௌசல்யா அவர்களுக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி மற்றும் விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., ஆகியோரது முன்னிலையில் மணவிழா நடைபெற்றது. உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆகியோர் உள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஜூன் 20-**

**“முரண்பாடுகளின் மொத்த உருவமான ஆளுநர் உரை உள்ளது என்றும், த.வெ.க. - பா.ஜ.க. இடையே யான மறைமுகக் கூட்டணியை அம்பலப்படுத்துகிறது” என்றும் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டியில் தெரிவித்துள்ளார்.**



கழக இளைஞர் அணிச் செயலா ளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலை வருமான உதயநிதி ஸ்டாலின் அவர் கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

“பத்திரிகை நண்பர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக ஆட்சி அமைந்த பிறகு, முதன்முறையாக நம் ஆளுநர் இரா ஜேந்திர அர்லேகர் அவர்கள், இன் றைக்கு சட்டமன்றத்துக்கு வருகை தந்து, ஆளுநர் உரையினை வாசித் திருக்கிறார். பொதுவாக ஆளுநர் உரை என்பது ஆளுநருடைய ஒரு தனிப்பட்ட உரை கிடையாது. அது அரசு தயாரித்துக் கொடுக்கக்கூடிய உரை, அரசின் ‘பாலிசி நோட்’ போன்ற ஒரு ‘ப்ளூ பிரிண்ட்’.

**சுய தம்பட்டம்! சுய புராணம் !**

இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தார்கள், அதையெல்லாம் எப்படிச் செயல்படுத் தப் போகிறார்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு எல்லாம் எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதை, முன்கூட் டியே சொல்லக்கூடிய ஒரு பாலிசி நோட்டாகத்தான் எப்பொழுதுமே ஆளுநர் உரை இருக்கும்.

ஆனால், இன்றைக்கு ஆளுநர் உரையை எடுத்துப் பார்த்தீர்கள் என் றால், அதில் இருக்கக்கூடியவை ஆளுங்கட்சியினர் `ரீல்ஸ்’ போடுவ தற்கான கன்டென்ட் மெட்டீரியலாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக் கிறது. அந்த அளவுக்கு முதலமைச்சர் அவர்கள் தன்னைப் பற்றியும், தன் கட்சியைப் பற்றியும் ஒரு சுய தம் பட்டம் அடித்துக் கொள்ளக்கூடிய, ஒரு சுயபுராணம் பாடிக்கொள்ளக்கூடிய ஒரு உரையாகத்தான் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

இன்னும் குறிப்பாகப் பார்த்தால், கடந்த ஐந்து வருடங்களாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும் போது, எங்களுடைய முதலமைச்சர், எங்களுடைய அரசு தயாரித்துக் கொடுக்கக்கூடிய எந்த உரையையும் ஆளுநர் முழுமையாகப் படித்ததே கிடையாது. அதில் பல திருத்தங்களை ஆளுநர் செய்வார். ஆனால், இந்த முறை ஆளுநர் அவர்கள் இந்த அரசு என்ன தயாரித்துக் கொடுத்திருக்கி றதோ, அதை அப்படியே ஒரு வரி மாற்றாமல், ஒரு எழுத்து மாற்றாமல் அப்படியே வாசித்திருக்கிறார். இதிலி ருந்தே இந்த அரசுக்கும், ஒன்றிய ஆளுங்கட்சியான பா.ஜ.க.விற்கும் ஒரு இணக்கமான ஒரு சூழ்நிலை, ஒரு கனெக்சன் ஏற்பட்டுவிட்டதோ என்கிற எண்ணம் அனைவருக் குமே ஏற்பட்டிருக்கிறது.

**திராவிட மாடல் அரசின் திட்டங்கள் சாதனைகள்!**

அவர்களுடைய சொந்த சுய புரா ணத்தை எல்லாம் தவிர்த்துவிட்டுப் பார்த்தீர்கள் என்றால், ‘ஒலிம்பிக் மையங்கள்’, ‘திறன் பயிற்சி மையங் கள்’ ‘69 சதவிகித இட ஒதுக்கீடு’, ‘இரு மொழிக் கொள்கை’, ‘தேசிய கல்விக் கொள்கை 2020 எதிர்ப்பு’, ‘நிலுவை யில் இருக்கக்கூடிய கல்வி நிதி கேட் டுக் கோரிக்கை’, ‘வறுமையில்லா தமிழ்நாடு’, ‘உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழி’, ‘சென்னை யில் உச்சநீதிமன்றக் கிளை’, ‘கீழடி உள்ளிட்ட அகழாய்வுகள்’, ‘இந்தியா விலேயே அதிகமாக நகர்மயமான மாநிலம் தமிழ்நாடு’ இப்படி எங்கள் அரசின் திட்டங்கள், சாதனைகள், கோரிக்கைகளைத்தான் மீண்டும் இவர்கள் படித்திருக்கிறார்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### முதலமைச்சரிடம் மனு அளிக்க அனுமதி மறுப்பு!

# திருநங்கைகள் ஆர்ப்பாட்டம்!

### தலைமைச் செயலகம் அருகே சாலை மறியல்!

*சென்னை, ஜூன் 20-*

*சென்னை தலைமைச் செயலகத்தில் மனு அளிக்க வந்த திருநங்கை களை காவல்துறையினர் சென்னை போர் நினைவு சின்னம் அருகே தடுத்து நிறுத்தியதால், சாலை யில் அமர்ந்து ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.*

*சென்னை தலைமை செயலகத்தில் முதல மைச்சரை நேரில் சந் தித்து மனு அளிக்கும் நடைமுறையை த.வெ.க. அரசு ரத்து செய்துள்ளது. இந்நிலையில் முதல மைச்சர் விஜயை நேரில் சந்தித்து, தங்களின் கோரிக்கைகளை மனு வாக, அளிப்பதற்காக ஏராளமான திருநங்கை கள் தலைமைசெயலகம் நோக்கி வந்தனர். அவர் களை போர் நினைவுச் சின்னம் அருகே போலீ சார் தடுத்து நிறுத்தினர்.*

*இதனால் நூற்றுக் கணக்கான திருநங்கை கள் மனு அளிக்க அனுமதி வழங்கக்கோரி, போர் நினைவு சின்னம் அருகே சாலையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். ஆர்ப் பாட்டத்தின்போது, போலீஸார் பொய் வழக்குப் பதிவு செய்வ தாக திருநங்கைகள் குற்றஞ்சாட்டினர்.*

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கழக எம்.எல்.ஏ.க்கள்

# ‘வாயைத் திறங்க CM’ - பேட்ஜ் அணிந்து முழக்கம்!

## சட்டப்பேரவை வளாகத்தில் பதாகைகளை ஏந்தி கண்டனம்!

**சென்னை, ஜூன் 20-**

**தமிழ்நாடு சட்டப்பேரவையின் கூட்டம் நேற்று தொடங்கியது. முன் னதாக, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு த.வெ.க. ஆட்சியில் சீர்கெட்டுள்ளது. குழந்தைகள், மகளிருக்கு எதிரான பாலியல் வன்முறை அதிகரித்துள் ளது என்பதை வெளிப்படுத்தும் வித மாக சட்டமன்ற கழக உறுப்பினர்கள் கருப்பு பதாகைகளை ஏந்தி கண்டன முழக்கங்களை சட்டமன்ற வளாகத் தின் வெளியே எழுப்பினர்.**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக உறுப்பினர்கள் ‘வாயைத் திறங்க CM’ என்று குறிப்பிட்டிருந்த கருப்பு பேட்ஜை அணிந்து கொண் டிருந்ததோடு, கருப்புப் பதாகை களையும் ஏந்தி கீழ்க்கண்ட கண் டன முழக்கங்களை எழுப்பினர்.

- **வாயைத் திறங்க CM**
- **கதறல் கேட்குதா CM?**
- **சிறு பெண்கள் இங்கே! சிங்கப் பெண்கள் எங்கே?**
- **ரீல்ஸ் இங்கே.. ரியல் எங்கே?**
- **மாஸ்டர் வாயில் பிளாஸ்டர்..**
- **திரையில் நாயகன்.. தரையில் வில்லன்**
- **திரையில் HERO தரையில் ZERO**
- **தற்குறி ஆட்சி தமிழ்நாடே சாட்சி**
- **தூய சக்தி அல்ல துயர சக்தி**

என்பன உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி தி.மு.க. உறுப்பினர்கள் போராட் டம் நடத்தினர்.

இதையடுத்து நடைபெற்ற சட்ட மன்றக் கூட்டத்தில், ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன்னதாக தமிழ்த்தாய் வாழ்த்தும், அதை யடுத்து தேசிய கீதமும் இசைக்கப் பட்டது.

அதைத் தொடர்ந்து, ஆளுநர் அர்லேகர் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். அதன் தமிழாக் கத்தை பேரவைத் தலைவர் ஜெ.சி. டி. பிரபாகரன் வாசித்தார். அதன் பிறகு மீண்டும் இரண்டாம் முறை யாக தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

சட்டமன்ற மரபை மீறி தொடக் கத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட தற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

